DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII Code of Criminal Procedure)

---

IN THE COURT OF IV ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, MADURAI

**S.C. No.422/2017**

**P.W.2**

DEPOSITION OF WITNESS FOR PROSECUTION DEFENCE COURT

| | | |
|---|---|---|
| NAME | : | திருமலைக்குமார் |
| Father Name | : | அழகுபாண்டியன் |
| VILLAGE | : | |
| CASTE | : | |
| CALLING | : | |
| RELIGION | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 09.12.2024.

(1, 2, 4, 5 மற்றும் 6 எதிரிகள் ஆஜர். 3 வது எதிரி இறந்துவிட்டார். )

**<u>அரசு தரப்பில் முதல் விசாரணை :</u>**

நான் தற்போது கூடுதல் துணை ஆணையர், போக்குவரத்து திட்டப்பிரிவு, மதுரை மாநகரில் பணிபுரிந்து வருகிறேன். முன்னதாக கடந்த 2016 ம் ஆண்டு மதுரை மாநகர் தல்லாகுளம் போக்குவரத்து உதவி ஆணையராக பணிபுரிந்து வந்தேன். கடந்த 03.01.2016 ம் தேதியன்று காலை 08.00 மணி முதல் மதுரை பெரியார் பேருந்து நிலையம் அருகிலுள்ள வீரபாண்டிய கட்டபொம்மன் 257 வது பிறந்தநாள் விழா பாதுகாப்பு பணியில் கட்டபொம்மன் சிலையில் பணியில் இருந்து வந்து, அது சமயம் என்னுடன் உதவி ஆணையர் பீர் முகமது, நுண்ணறிவு பிரிவு Photographer தலைமை காவலர் 308 பாண்டிச்சாமி, சிறப்பு உதவி ஆய்வாளர் ரவிச்சந்திரன் மற்றும் பல காவல்துறையினர் பணியில் இருந்து வந்தோம். அது சமயம் சுமார் 13.15 மணியளவில் காவல் ஆணையரின் தடை உத்தவினை மீறி கட்டபொம்மன் சிலைக்கு டாடா சுமோ TN 65 E 2325 வாகனத்தில் வந்த பழந்தமிழர் மக்கள் கட்சியின் பொதுச்செயலாளர் மற்றும் அவருடன் வந்த கட்சியினர் வீடியோகிராபர் பாண்டிச்சாமியை போலிஸ் தேவுடியா பசங்களா,

எங்களை ஏன் வீடியோ எடுக்கிறாய், உங்கள் வேலையை பார்த்து செல்ல வேண்டியது தானே என்று கூறி வீடியோ கேமராவை பறிக்க முயன்றனர். அது சமயம் அதை தடுக்க முயன்ற பாண்டியச்சாமியின் கன்னத்தில் பின்னால் பெயர் தெரிந்த கணேசன் என்பவர் அறைந்தார். அவருக்கு துணையாக நாராயணன் மற்றும் மதுரைவீரன் என்ற வீரக்குமார் ஆகியோர்கள் தங்கள் கைகளால் பாண்டிச்சாமியை தாக்கி வீடியோ கேமராவை பிடுங்கி தரையில் அடித்து உடைத்தனர். இவர்களுக்கு உடந்தையாக இவர்களுடன் வந்த மணிகண்டன், கந்தசாமி, சக்திவேல் மற்றும் பலர் போலிஸ் தேவுடியா பசங்களுக்கு இதே தான் வேலை, அந்த போட்டோகிராப்பரின் கை, கால்களை உடையுங்கள், அப்போது தான் நம்மை பார்த்து போலிசார் பயப்படுவார்கள் என்று கூறிக்கொண்டே கீழே கிடந்த ஜல்லி கற்களை எடுத்து போலிசாரான எங்கள் மீது வீசினார்கள். இதில் ஒரு கல் எனது இடது காலின் கணுக்காலில் பட்டு காயம் ஏற்பட்டது. என்னுடன் இருந்த பீர் முகமது, திலகர் திடல் உதவி ஆணையர் அவர்களுக்கு காயம் ஏற்பட்டது. மேலும் என்னுடன் பணியில் இருந்த சிறப்பு உதவி ஆய்வாளர் ரவிச்சந்திரனுக்கும் காயம் ஏற்பட்டது. அப்போது மேற்கண்ட ஆறு எதிரிகளில் 3 வது எதிரியான மதுரைவீரன் என்ற வீரக்குமார் என்பவர் தப்பி ஓடிவிட்டார், மற்ற ஐந்து நபர்களையும் காவல் துறை குழுவினருடன் சேர்ந்து கைது செய்தோம். இதனை தொடர்ந்து இந்த பாதுகாவல் பணி முடிந்து காலில் வலி இருந்த காரணத்தினால் அருகிலிருந்த Quality Care என்ற மருத்துவமனைக்கு சென்று முதலுதவி பெற்று அங்கு மருத்துவர் இல்லாத காரணத்தினால் மதுரை அரசு ராசாசி மருத்துவமனைக்கு சுமார் 17.25 மணிக்கு சென்று உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றேன். அப்போது புலன் விசாரணை அதிகாரி அவர்களிடம் நடந்ததை கூறினேன்.

<u>4 மற்றும் 5 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :-</u>

நான் முதல் விசாரணையில் குறிப்பிட்டுள்ளபடி சுமார் 13.15 மணியளவில் காவல் ஆணையரின் தடை உத்தவினை மீறி கட்டபொம்மன் சிலைக்கு டாடா சுமோ

TN 65 E 2325 வாகனத்தில் வந்த பழந்தமிழர் மக்கள் கட்சியின் பொதுச்செயலாளர் மற்றும் அவருடன் வந்த கட்சியினரை வீடியோகிராபர் பாண்டிச்சாமி வீடியோ எடுத்துள்ளார் என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் எந்த எதிரி பாண்டிசாமியை அவதூறாக பேசினார் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். அது போல் பாண்டிச்சாமியிடமிருந்து எந்த எதிரி கேமராவை பறிக்க முற்பட்டார் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். அது போல் எந்த எதிரி பாண்டிச்சாமியின் வலது, இடதுபுற கன்னத்தில் அறைந்தார் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். அது போல் எந்த எதிரி கேமராவை பிடுங்கி தரையில் அடித்து உடைத்தனர் என்ற விவரத்தை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். மேலும் போட்டோகிராப்பரின் கை, கால்களை உடையுங்கள், அப்போது தான் நம்மை பார்த்து போலிசார் பயப்படுவார்கள் என்று எந்த எதிரி யாரிடம் சொன்னார் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். அது போல் எந்த எதிரி எந்த காவலர் மீது ஜல்லிக்கற்களால் எறிந்தார்கள் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். நான் Quality Care மருத்துவமனைக்கு எத்தனை மணிக்கு சென்றேன் என்ற விவரத்தை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். அது போல் எனக்கு முதலுதவி செய்த செவிலியர் பெயரை நான் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். எனக்கு ஏற்பட்ட சிறு காயங்கள் ஜெயந்தி பந்தோபஸ்தின் போது கூட்ட நெரிசலில் ஏற்பட்ட தள்ளுமுள்ளு காரணமாக ஏற்பட்ட காயம் என்றும், தள்ளுமுள்ளுவிற்கு காரணமான நபர்களை விடுத்து ஜெயந்திக்கு வந்த மேற்படி டாடா சுமோவின் உரிமையாளர் என்ற அடிப்படையில் அவரை கைது செய்து, அவருடன் பேசிக்கொண்டிருந்த மற்ற எதிரிகளை இந்த வழக்கில் பின்னிட்டு சேர்த்துள்ளோம் என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கும் எதிரிகளுக்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல.

**<u>1 மற்றும் 6 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :-</u>**

(1 மற்றும் 6 எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர், ஆனால் குறுக்கு விசாரணை செய்ய தயாராக இல்லை.)

**<u>2 வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :-</u>**

(2 வது எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர் இல்லை.)

**<u>மறு விசாரணை –</u>** இல்லை.